## November 27, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கடந்த 1949-ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபையால் அரசமைப் புச்சட்டம் ஏற்கப்பட்ட நவ.26-ஆம் தேதி அரசமைப்புச் சட்ட தினமாக கடந்த 2015-இல் இருந்து கொண்டாடப்பட்டுவருகிறது.
2. பாகிஸ்தானுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்து வரும் டிசம்பர் மாதம் முதல் மீண்டும் தொடங்கவுள்ளது.
   i. இது இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்பை பெரிதும் வலுப்படுத்தும். கடந்த டிசம்பரில் இருந்து செயல்படுத்தப்பட்டுள்ள நேரடி சரக்குப் போக்குவரத்து சேவைக்கு இது பெரும் உதவியாக இருக்கும்.
   ii. பாகிஸ்தான் வங்கதேசம் இடையிலான வர்த்தகம் அதிகரித்துள்ளதால், நேரடி சரக்குக் கப்பல் போக்குவரத்தும் விரைவில் தொடங்கும் என்றார் அவர்.
   iii. மாணவர் போராட்டங்களால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஷேக் ஹசீனா பதவியில் இருந்து விலகிய பிறகு அமைந்த முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பாகிஸ்தானுடன் உறவுகளை மேம்படுத்திவருகிறது.
   iv. இதன் விளைவாக நுழைவு இசைவு (விசா) வழங்குவதில் எளிமை உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
3. கோவாவில் நடைபெற்ற 11-ஆவது ஃபிடே உலகக் கோப்பை செஸ் போட்டியில், உஸ்பெகிஸ்தானின் ஜாவோகிர் சிண்டாரோவ் (19) சாம்பியன் கோப்பை வென்றார்.
4. 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் குஜராத் மாநிலம், அகமதாபாதில் நடைபெறும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
   i. அந்தப் போட்டிகள் இந்தியாவில் நடைபெற இருப்பது இது 2- ஆவது முறையாகும். இதற்கு முன் 2010-இல் தில்லியில் அவை நடைபெற்றது.
   ii. 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவதற்கு இந்தியா திட்டமிட்டு வரும் நிலையில், அந்த இலக்குக்கான தயார்நிலைக் களமாக இந்த காமன்வெல்த் போட்டிகள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   iii. முன்னதாக, 2010 காமன்வெல்த் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியா ரூ.1,600 கோடியை மதிப்பீடு செய்திருந்த நிலையில், அந்தப் போட்டிகள் ரூ.70,000 கோடி மதிப்பில் நடத்தி முடிக்கப்பட்டது. அத்துடன், போட்டியை நடத்துவதில் நிகழ்ந்த ஊழலுக்காக பலத்த விமர்சனங்களும் இருந்தது நினைவுகூரத்தக்கது.
5. அரிய புவி காந்தங்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ரூ.7280 கோடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
   i. மின்சார வாகனங்கள், விண்வெளித் துறை, மின்னணு சாதனங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு துறை உபகரணங்களில் இந்த அரிய புவி காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
   ii. இதன் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'மத்திய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.7.280 கோடி திட்டம், அரிய புவி நிரந்தர காந்தங்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும். ஆண்டுக்கு 6,000 மெட்ரிக்டன் அளவுக்கு உற்பத்தித் திறனை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்' என்றார்.
6. இந்தியா - ஸ்லோவேனியா இடையே வர்த்தகம், முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான வழிகள் குறித்து இரு நாடுகளும் ஆலோசனை மேற்கொண்டன.
   i. வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான இந்தியா-ஸ்லோவேனியா

கூட்டுக் குழுவின் 10-ஆவது அமர்வு ஆலோசனைக் கூட்டம் தில்லியில் நடைபெற்றது.

ii. அதில், வேளாண், ரசாயனம், மருந்து உற்பத்தி, சுகாதாரம், போக்குவரத்து, எரிசக்தி உற்பத்தி, சுற்றுலா, குறு-சிறு-நடத்தர நிறுவனங்கல், ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடகளிடையேயான உறவை மேம்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

iii. மேலும், இந்திய - ஐரோப்பிய யூனியன் இடையேயான சமமான, பரஸ்பரம் பலனளிக்கக் கூடிய வகையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய இருதரப்பிலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஸ்லோவேனியா ஐரோப்பிய யூனியனில் உறுப்பு நாடாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

7. தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் ஃபிரான்ஸ் நாட்டின் மிகப்பெரிய விமான பராமரிப்பு நிறுவனமான சாஃப்ரான் நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக விமானங்களில் பயன்படுத்தப்படும் 'லீப்' என்ஜின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு, புதுப்பிப்பு (எம்ஆர்ஓ) மையத்தை காணொலி வழியில் தொடங்கிவைத்த பிரதமர் மோடி பேசியதாவது:

i. கடந்த சில ஆண்டுகளாக விமானத் துறையிலும் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்று வருகிறது. உலகிலேயே மூன்றாவது மிகப் பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியா உள்ளது. விமானபயணத்துக்கான தேவை அதிகரித்திருப்பதால், இந்திய விமான நிறுவனங்கள் தங்களின் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றன. தற்போது, சுமார் 1,500-க்கும் அதிகமான புதிய விமானங்களை வாங்க இந்திய விமான நிறுவனங்கள் பரிந்துரைகளை அளித்துள்ளன.

ii. அவ்வாறு, இந்திய விமானப் போக்குவரத்துத் துறை விரிவடைந்து வரும் நிலையில், விமானங்களின் 'லீப்' என்ஜின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு, புதுப்பிப்பு (எம்ஆர்ஓ) மையங்களுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது. நாட்டின் 85 சதவீத எம்ஆர்ஓ பணிகள் வெளிநாடுகளில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், செலவு அதிகமாவதோடு, விமானப் பயன்பாட்டு நேரமும் விரயமாகிறது. எனவே, இந்தியாவை உலகின் மிகப் பெரிய எம்ஆர்ஓ முனையமாக மாற்றும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, முதல் முறையாக நாட்டில் விமான என்ஜின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு, புதுப்பிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

iii. ஹைதராபாதில் ரூ.1,300 கோடி தொடக்க முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள 'சாஃப்ரான் விமான என்ஜின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு இந்தியா (எஸ்ஏஇஎஸ்ஐ) மையம் 2026-இல் செயல்படத் தொடங்கும் என்று பிரதமர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

8. சென்னை ஐஐடி, துறைமுகங்களுக்கான முதலாவது உள்நாட்டு கப்பல் போக்குவரத்து மேலாண்மை அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

i. சென்னை ஐஐடியின் துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மைய (என்டிசிபிடபிள்யூசி) ஆராய்ச்சியாளர்கள், துறைமுகங்களுக்கான நாட்டின் முதலாவது உள்நாட்டு கப்பல்போக்கு வரத்து மேலாண்மை அமைப்பை உருவாக்கி, அதை கேரளம் விழிஞ்சம் சர்வதேச துறைமுகப் பயன்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளனர்.

ii. இது குறித்து என்டிசிபிடபிள்யூசி தலைவர் பேராசிரியர் கே முரளி செய்தியாளர்களிடம் கூறியதாவது: மத்திய துறைமுகங்கள், கப்பல்

போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் தேவைகளின் அடிப்படையில் இந்த அமைப்பு முழுமையாக உருவாக்கப்பட்டுள்ளது.

*iii.* குறிப்பாக, இது உள்நாட்டு அமைப்பு கப்பல்களின் இயக்கத்தின் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த தரவு கசிவு அபாயத்தை நீக்குகிறது. மேலும், பல்வேறு சவால்களுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கவும், புதுமைகளை விரைவாகக் கண்காணிக்கவும், தனியார் விற்பனையாளர்களைக் கையாள்வதில் தொடர்புடைய பிற செயல்பாட்டு நிதி அபாயங்களையும் குறைக்கும்.